Centre international d'éducation aux droits humains
International Centre for Human Rights Education
மனித உரிமைகள் கற்கைக்கான சர்வதேச மையம்

மொழியின ஆய்வுக்கான சர்வதேச மையம்

# இலங்கையிலே மதங்களுக்கிடையிலான நல்லிசைவினை ஊக்குவித்தல்

# PROMOTING RELIGIOUS HARMONY IN SRI LANKA

## Lessons Learned and Good Practices

## கற்றுக்கொண்ட பாடங்களும் நல்ல நடைமுறைகளும்




கனேடிய அரசாங்கம்

Government of Canada
Gouvernement du Canada

# அங்கீகரிப்புகள்

இந்த ஆவணமானது *இலங்கையிலே மதங்களுக்கிடையிலான நல்லிசைவை ஊக்குவித்தல்* செயற்திட்டத்தின் ஒரு பகுதியாக விருத்தியாக்கப்பட்டது.. இந்த செயற்திட்டமானது ஈக்குவிட்டாஸ் (Equitas) எனும் ஸ்தாபனத்தால் மொழியின ஆய்வுக்கான சர்வதேச மையத்தின் பங்காளித்துவத்துடன் அமுல்படுத்தப்பட்டது.

***மனித உரிமைகள் கற்கைக்கான சர்வதேச மையம் – ஈக்குவிட்டாஸ் (Equitas** – International Centre for Human Rights Education)* ஸ்தாபனம் சமத்துவத்தின் மேம்பாட்டுக்கும், சமூக நீதிக்கும் மற்றும் மனித மாண்பின் கௌரவத்துக்குமாக கனடாவிலும் மேலும் உலகெங்கனும் மறுசீரமைக்கும் மனித உரிமைகள் கற்கை நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்திவரும் ஒரு லாபநோக்கற்ற ஸ்தாபனமாகும்.

***மொழியின ஆய்வுக்கான சர்வதேச மையம் (ICES** - International Centre for Ethnic Studies) என்பது மொழியினம், இன அறிமுக அரசியல் மற்றும் முறுகல்கள் போன்றவைகள் பற்றிய புரிந்தறிவை ஆழமாக்குவதையும், உள்ளக்கப்பட்டதும் நீதியானதும் சமாதானமானதுமான ஒரு சமூகத்தை வளர்ப்பதையும், ஆய்வுகளூடாகவும், பதிப்புகளூடாகவும், உரையாடல்களூடாவும், ஆக்கபூர்வமான புலப்படுத்தல்களூடாகவும், மற்றும் அறிவுப்பரிமாற்றமூடாகவும் மேற்கொள்வதைத் தனது பணிநோக்காகக் கொண்ட ஒரு சுயாதீன ஆய்வு மையயமாகும்.*

*இந்தப் பதிப்பிலே வழக்கப்பட்டுள்ள கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்ல நடைமுறைகளின் திரட்டானது பின்வருவோரை உள்ளடக்கிய ஈக்குவிட்டாஸ் அணியினால் விருத்தியாக்கப்பட்டதாகும்: சாரா லூஸ்தயுஸ் (Sarah Lusthaus), வின்ஸென்ஸா நஸ்ஸாரி (Vincenza Nazzari), ஜீன் செபஸ்ரீன் (Jean-Sebastien), வல்லயி (Vallée) மற்றும் மிலாக்றொஸ் ஆர்குவெலஸ் (Milagros Arguelles).*

*இந்தப்பதிப்பின் கருத்துருவாக்கம் மற்றும் விருத்தியாக்கம் ஆகியவற்றுக்குப் பங்களிப்புச்செய்த யாவருக்கும், குறிப்பாக விலைமதிப்பற்ற உள்ளீடுகளையும், மீளூட்டங்களையும் வழங்கிய அம்பாறை, கொழும்பு மற்றும் காலி குழுக்களுக்கும், சிவில் சமூக அங்கத்தவர்களுக்கும், மதக் குழுக்களுக்கும், ஞாயிறு பாடசாலைகளுக்கும், மற்றும் இந்த செயற்திட்டச் செயற்பாடுகளிலே பங்கேற்ற அரச ஸ்தாபன பிரதிநிதிகளுக்கும் ஈக்குவிட்டாஸ் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.*

*அம்பாறை, கொழும்பு மற்றும் காலிக் குழுக்களைச் சேர்ந்த சகல பங்காளிகளையும் நாம் இத்தால் அங்கீகரிக்கின்றோம். பின்வருவோருக்கு எமது விசேஷ நன்றிகள் உரித்தாகட்டும்:*

- செயற்திட்ட வள அனுசரனை மற்றும் பயிற்றுவிப்பு அணிகள்: கிறிஸ்டினா ஸ்கங்கா (Cristina Sganga), ஏர்மிஸா ரேகல் (Ermiza Tegal), கசுன் பதிராஜா (Kasun Pathiraja) மன்றும் சஜீட் ஃபஹுர்டீன் (Sajeed Fahurdeen).
- அம்பாறைக் குழு: A.L. கிதுறு மொஹமட் (Kithuru Mohamed), இப்றாலெப்பை ஹஷிம் (Ibralebbe Hashim), A.M. மொஹமட் ரம்ஸீ (Mohamed Ramsee), காஞ்சனா கசுப் குமார (Kanchana Kasup Kumara), ஃபஸ்லான் மொஹமட் (Faslan Mohomed), M. சலீ ஜலீல் (Saly Jaleel), றஷாத் அஹமட் (Rashath Ahamed), அருளானந்தம் சக்தியா (Arulanantham Sakthiya).
- கொழும்புக் குழு: B.T. சந்தன குமார (Chandana Kumara), ஜெகன் பிரகாஷ் சௌந்தரராஜா (Jegan Prakash Saundararaja), ராமனுஷா பூபாலரட்னம் (Ramanusha Poopalaratnam), கெத்மா கல்ஹரி விக்கிரமசிங்க (Kethma Kalhari Wickremasinghe), நிலூகா பண்டார (Niluka Bandara), D.M. றோஹினி தஸநாயக்க (Rohini Dasanayaka), அருந்ததி அபேபால (Arundhati Abeypala), வண. S. சுமரத்தன தேரோ (Sumarathana Thero).
- காலிக் குழு: B.H. சோமசிறி (Somasiri), வண. கிங்ஸ்லி லொய்ட எல்ரன் (Kingsley Lloyd Elton), W.E.R. பெரேரா (Perera), டியானா குமுதினி சில்வா (Diana Kumudini Silva), M.F.F. லுத்ஃபியா (Luthufiya), M. F. ஷர்மிலா (Shamila), நதீன் வன்னியசிங்கம் (Nadine Vanniyasinkam), வண. வெலிவெட்டிய தம்மிந்த தேரோ (Welivetiye Dhamminda Thero)
- ICES அணியானது மறியோ கோமஸ் (Mario Gomez) என்பவரால் தலைமதாங்கப்பட்டது.

இந்த செயற்திட்டமானது கனேடிய அரசின் வெளிவிவகார, வர்த்தக மற்றும் அபிவிருத்தி அமைச்சின் நிதிய ஆரவினாலேயே சாத்தியப்பட்டது. அவர்களுக்கும் நன்றி.




*இந்த தேசப்படமானது பின்வரும் வலைத்தளத்தில் இருந்து தரவிறக்கம் செய்யப்பட்டது:*
http://www.nationsonline.org/oneworld/map/sri_lanka_map.htm

# உள்ளடக்கப்பட்டியல்

இலங்கையிலே மதங்களுக்கிடையிலான நல்லிசைவினை ஊக்குவித்தல்....1

அங்கீகரிப்புகள்....3

அறிமுகம்....8

**கற்றுக்கொண்ட பாடங்களும் நல்ல நடைமுறைகளும்**....11

1. உரையாடலுக்கான வெளியை உருவாக்குதல்....13
2. பல்வேறு மத சமூகங்களை ஒன்றாகக் கூட்டிச்சேர்த்தல்....17
3. தீர்மானம் மேற்கொள்வோருடனான ஈடுபடுதல்....19
4. சிறுவர்கள் மற்றும் வாலவயதினர்களுடனான ஈடுபடுதல்....23
5. ஊடகத்துடனான ஈடுபடுதல்....27

**மதங்களுக்கிடையிலான நிகழ்வுகளை ஒழுங்கமைப்பதற்கான சிந்தனைகளும் உபாயங்களும்**....29

**சமூச் செயற்பாட்டுத் திட்டங்களின் சுருக்கம்**....31

# அறிமுகம்

## இந்தப் பதிப்பைப்பற்றி

இந்தப் பதிப்பானது மதங்களிடையேயான நல்லிசைவினை ஊக்குவித்தல் செயற்திட்டத்தினூடாக விருத்தியாக்கப்பட்ட கருவிகளுள் ஒன்றாகும். இந்தச் செயற்திட்ட அமுலாக்கத்தின்போது தீர்மானம் மேறக்கொள்வோர், மதக் குழுக்கள், அரச அலுவலர்கள், சிவில் சமூக அங்கத்தவர்கள், சிறுவர்கள் மற்றும் வாலவயதினர்கள், ஆசிரியர்கள் மற்றும் இதர பணயப்பங்காளிகள் ஆகியோரை உள்ளிட்ட பல்வேறுபட்ட செயற்பாட்டாளர்களுடன் இடைப்படுதலின்போது கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்ல நடைமுறைகளை இது உள்ளடக்கியுள்ளது

## இந்தச் செயற்திட்டத்தைப்பற்றி

மதங்களிடையேயான நல்லிசைவினை ஊக்குவித்தல் செயற்திட்டம் (2014–2016) இலங்கையில் இருக்கும் பல்வேறு மதக் குழுக்களிடையேயான புரிந்தறிவினை மேம்படுத்துவதையும், சமூக நல்லிலைவினை ஊக்குவிக்குவிப்பதையும், மதங்களிடையேயான சகவாழ்வை வளர்த்தெடுப்பதையும் நோக்காகக் கொண்டது.

இந்த செயற்திட்டமானது அம்பாறை, கொழும்பு, மற்றும் காலி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சமூகங்களுடன் அமுல்படுத்தப்பட்டது. இந்த மாவட்டங்களில் உள்ள குழுக்கள் அந்தந்த மாவட்டங்களிலே அவர்கள் மேற்கொண்ட செயற்லாற்றத் திட்டங்களால் அவற்றை வலுவூட்டவும், மத நல்லிசைவினைவினையும் மதங்களினதும் நம்பிக்கைகளினதும் சுயாதீனத்தையும் ஊக்குவிக்கவும் இது உதவியது.

இந்தச் செயற்திட்டத்தின் பிரதான கூறுகளாய் இருந்தவைகள் பின்வருமாறு:

- **இலங்கையில் உள்ள மத சுதந்திரத்தின் நிலைமை** பற்றிய சட்டபூர்வ மற்றும் சமூக ஆய்வு
- மனித உரிமைகள் கல்வியூட்டம் மற்றும் மத நல்லிசைவினை ஊக்குவித்தல் ஆகியவற்றுக்கான **தகைமைக் கட்டியெழுப்பல் பணிக்களங்கள்**
- 3 சமூகங்களிலும் இடம்பெற்ற, மத நல்லிசைவினை ஊக்குவித்தலையும் மதங்களின் சகவாழ்வை வளர்த்தெடுத்தலையும் நோக்காகக்கொண்ட **செயலாற்றத்திட்டங்கள்**
- **கைக்கொள்ளுநர்களின் மன்றத்தினதும் ஆய்வினதும் ஸ்தாபகம்**

**மனித உரிமைகள் கல்வி** என்பது மனித உரிமைகளின் சர்வதேச காலச்சாரமொன்றைக் கட்டியெழுப்பும் நோக்கத்தைக் கொண்டதான ஒரு சமூக மறுசீரமைப்புக் கருவியாகும். இது மனித உரிமைகள் சார்ந்த அணுகுமுறையினால் (human rights-based approach-HRBA) வழிகாட்டப்பட்டு, பங்கேற்பினையும், பொறுப்புக்கூறலையும், பாகுபாடுகள் இல்லாமையையும், வலுவூட்டத்தையும், மற்றும் மனித உரிமைகளுக்கான தொடர்புகளையும் வலியுறுத்துவதாய் உள்ளது. மேலும், சமூச் செயலாற்றங்களை எய்துவதற்கான சர்வேதரீதியிலே இனங்காணப்பட்ட நியமத்தை HRBA வழங்குகிறது.

**பங்கேற்பு அணுகுமுறை** என்பது மதங்களுக்கிடையிலான நல்லிசைவினை ஊக்குவிக்கும் செயற்திட்டமானது கைக்கொள்வதும் அதன் சகல செயற்பாடுகளின் அமுலாக்கத்திலும் வழிநடாத்துவதுமான கல்வியூட்ட அணுகுமுறையாகும்; இந்தப் பங்கேற்பு அணுகுமுறையானது HRBA இன் மனித உரிமைகள் கற்கையினையும் மற்றும் இதர சமூக செயலாற்றங்களையும் அமுல்படுத்துவதற்கான வினைத்திறனுள்ளதோர் வழிமுறையாகும். ஒரு பங்கேற்பு அணுகுமுறை, மனித உரிமைகள் பற்றியதான தனிநபர் அறிவையும் அனுபவத்தையும் பகிர்வதையும், தனிப்பட்ட ரீதியிலே கைக்கொள்ளும் மதிப்பீடுகள் மற்றும் நம்பிக்கைகள் ஆகியவற்றையிட்டு கண்டனமனதுடன் சிந்தைப்பிரதிபலிப்பை வளர்ப்பதையும் ஊக்குவிக்கும். பங்கேற்பு அணுகுமுறை என்பது வெறுமனே ஒரு செயன்முறை மாத்திரமல்ல, மாறாக, தேர்ச்சிபெற வேண்டியதான ஒரு அத்தியாவசியத் திறமையுமாகும்.

பங்கேற்பாளரால் முன்னெடுக்கப்படும் சமூக செயலாற்றச் செயற்திட்டங்கள் சிறுவர்களும் வாலிபர்களும், மதங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவும் செய்யும் ஆண்களும் பெண்களும், ஆகியோரை உள்ளிட்டதான இலக்குச்சமூக அங்கத்தவர்களை ஈடுபடுத்துவதாகவும், மதங்களிடையேயான நல்லிசைவுககாகப் பணியாற்றுவதாயும் மற்றும் மனித உரிமைகள் சார் அணுகுமுறயையும் பங்கேற்பு அணுகுமுறையையும் பயன்படுத்துவதாயும் இருந்தன.

## கற்றுக்கொண்ட பாடங்களும் நல்ல நடைமுறைகளும் பற்றிய வரைவிலக்கணம் [1]

**கற்றுக்கொண்ட பாடம்** என்பது ஒரு செயற்பாட்டினூடாகவோ அல்லது அனுபவத்தினூடாகவோ ஈட்டப்பெற்ற அறிவு அல்லது புரிந்தறிவாகும். அந்த அனுபவம் ஒரு வெற்றிகரமான வீடியோ மாநாட்டை நடாத்தி முடித்தது போன்றதான நேரிய அனுபவமாகவோ அல்லது எதிர்பார்க்கப்பட்ட இலக்குக் குழுவை அடைவதிலே தவறிய ஒரு விளிப்பறிவுப் பிரச்சாரம் போன்றதான ஒரு எதிர்மறை அனுபவமாயோ இருக்கலாம்.

**நல்ல நடைமுறைகள்** என்பது பெற்ற வெற்றி அல்லது ஏற்படுத்திய தாக்கத்துக்குச் சான்றுடன் வழங்கப்பட்டதும், நன்கு ஆவணப்படுத்தப்பட்டு மதிப்பாய்வு செய்யப்பட்டதுமான நடைமுறைகளாகும். பொதுவாக அவை பல்வேறு நாடுகளிலும் வேறுபட்ட பின்புலங்களிலும் பெறப்பட்ட ஒரேவிதமான அனுபவங்களிலே சார்ந்தவையாக இருக்கும். அவைகள் பரீட்சிக்கப்பட்டு நேரிய விளைவீடுகளை ஏற்படுத்தியுள்ள நடைமுறைகளாகும். நல்ல நடைமுறைகள் என்பது மீண்டும் செயற்படுத்தப்படவும் பகிரப்படவும் உகந்ததான உபாயத்திட்டங்கள், முறைமைகள் மற்றும் தொழில் நுட்பங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

### இலக்குக்கூட்டத்தினர்

இந்தப் பதிப்பிலே உள்ள கற்றுக்கொண்ட பாடங்களும் நல்ல நடைமுறைகளும் மத அல்லது நம்பிக்கைளின் சுதந்திரத்தை ஊக்குவிப்பதிலே பணியாற்றிவரும் கைக்கொள்ளுநர்கள், சிவில் சமூக ஸ்தாபனங்கள் மற்றும் இதர பணயப்பங்காளிகளுக்குக் குறிப்பானதாக உத்தேசிக்கப்பட்டதாகும். இங்கே புறவுருவிட்டுள்ள உபாயத்திட்டங்கள் மதம், இனசமூகம் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றைச் சூழ்ந்ததான அம்சங்களிலே சமூகங்களை அதிக வினைத்திறனுடன் உள்ளடக்கிக்கொள்வதிலே ஈடுபட்டிருக்கும் தீர்மானம் மேற்கொள்வோருக்கும் மற்றும் இதர பணயப்பங்காளிகளுக்கும் பயனுள்ளதாய் அமையும்.

### தகவல் மூலவளங்கள்

இந்த ஆவணந்த்திலே வழக்கப்பட்டுள்ள கற்றுக்கொண்ட பாடங்களும் நல்ல நடைமுறைகளும் சமயஙகளுக்கிடையிலான நல்லிசைவினை ஊக்குவிக்கும் செயற்திட்டத்தின் அமுலாக்கத்திலே பெறப்பட்ட அனுபவங்களில் இருந்தும் மற்றும் பின்வரும் ஆவணங்களில் இருந்து பெறப்பட்ட தகவல் மற்றும் விளைவீடுகளில் இருந்தும் பெறப்பட்டன:

1 **கைக்கொள்ளுநர்களின் [2] மன்றத்திலே பெறப்பட்ட குறிப்புகள்**: இது நவம்பர் 30, 2015 இலே இடம்பெற்றது. இந்த மன்றமானது மதக்குழுக்கள், அரசினர் மற்றும் கல்விமான்கள் ஆகியோரை உள்ளிட்டதான 50 இற்கும் பேற்பட்ட சிவில் சமூக ஆண்களையும் பெண்களையும் ஒன்றுதிரட்டியது.

2 **டிஸம்பர் 1, 2015 இலே ஆரம்பிக்கப்பட்ட தேசிய ஆய்விலிருந்து பெறப்பட்ட குறிப்புகள்**. இந்த ஆய்வு சிவில் சமூகம், அரசினர், மதக்குழுக்கள் மற்றும் கல்விமான்கள் ஆகியோரை உள்ளிட்டதான 100 இற்கும் பேற்பட்ட ஆண்களையும் பெண்களையும் ஒன்றுதிரட்டியது

---

[1] வரைவிலக்கணங்கள் பெறப்பட்ட தளங்கள்: www.ilo.org/ipec/programme/Designandevaluation/Goodpractices/lang--en/index.htm http://www.unep.org/eou/Pdfs/Lessons%20Learned%20rpt.pdf
Unicef மதிப்பாய்வும் மற்றும் கற்றுக்கொண்ட பாடங்களும்: www.unicef.org/evaluation/index_49082.html

[2] கைக்கொள்ளுநர்கள் என்பது மதங்கள் மற்றும் நம்பிக்கைகளின் சுயாதீனத்தை ஊக்குவிப்பதிலே ஈடுபட்டிருக்கும் சிவில் சமூக ஸ்தாபனங்களையும் (மத ஸ்தானங்கள் உள்ளடங்கலாக), அரச பிரதிநிதிகளையும் மற்றும் தனிநபர்களையும் குறிக்கும்.

3 **ஆய்வுப் பதிப்பு:** கெஹான் குணதிலக (Gehan Gunatilleke) எழுதிய "நீடித்ததும் கூர்மையடைந்ததும்; இலங்கையிலே யுத்தத்துக்குப் பின்பதான மத வன்முறைகள்" (The Chronic and the Acute; Post-War Religious Violence in Sri Lanka). இந்த ஆய்வானது இந்தச் செயற்திட்டத்தின் கூறுகளுள் ஒன்றாகும்.

4 மாவட்டக் குழுக்களிலே மேற்கொள்ளப்பட்டதான ஒவ்வொரு செயற்பாடுகளையும் பற்றி ஆவணப்படுத்திய விரிவான **செயற்பாட்டு அறிக்கைகள்**

5 தகைமைக் கட்டியெழுப்பல் பணிக்களங்களில் இருந்து பெறப்பட்ட **மதிப்பாய்வு விளைவுகளும் தொடர்முறைகளும்** (proceedings)

6 திட்டப் பணியாளர்களுடனும் பயிற்றுவிக்கும் அணியுடனும் இடம்பெற்ற **கூட்டங்களும் சிந்தைப்பிரதிபலிப்புகளும்.**

## இந்தப் பதிப்பின் முக்கிய தன்மைகள்

இந்தப் பதிப்பிலே பகிரப்பட்டுள்ள கற்றுக்கொண்ட பாடங்களும் நல்ல நடைமுறைகளும் *இலங்கையிலே சமயங்களுக்கிடையிலான நல்லிசைவினை ஊக்குவிக்கும்* செயற்திட்டத்துக்குக் குறிப்பானவையாகும். அவை இந்தச் செயற்திட்டத்தின் அனுபவங்களில் இருந்து பெறப்பட்டவை; அவை நியயமமானவைகள் அல்ல, அவைகள் கால ஓட்டத்துடன் கூர்ப்புவளர்ச்சி பெறும் என நாம் எதிர்பார்க்கிறோம்.

எமது அனுபவங்களிலே வெளிப்பட்ட ஒரு சில செய்நுட்ப அறிவகளைப் பிரதிபலிக்கும் உதாரணங்களையும் மேற்கோள்களையும் நாம் சேர்த்திருந்தாலுங்கூட, இந்த செயற்திட்டப் பங்கேற்பாளர்கள் மற்றும் பங்காளிகளின் இதயங்களிலும் மனங்களிலும் இதைவிடவும் அதிகமான இலைமறைகாயான அறிவு உள்ளது என்பதை நாம் அறிவோம்.

இங்கு வழங்கப்பட்டுள்ள கற்றுக்கொண்ட பாடங்களும் நல்ல நடைமுறைகளும் உங்களை உந்தியெழுப்புவதற்கென வழங்கப்பட்டவை அல்ல. உங்களது பின்புலம் உங்களுக்கு நன்கு தெரியுமாதலால், உங்களது குறிப்பான பின்புலத்துக்குப் பொருத்தமானதாக இதனை நீங்கள் தகவமைத்துக்கொள்ளலாம்.

# கற்றுக்கொண்ட பாடங்களும் நல்ல நடைமுறைகளும்

இந்தச் செயற்திட்ட அமுலாக்கத்தின்போது கற்றுக்கொண்ட பாடங்களும் நல்ல நடைமுறைகளும் 5 மகுடப்பொருள்களிலே வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன:

1 உரையாடலுக்கான வெளியை உருவாக்குதல்

2 பல்வேறு மத சமூகங்களை ஒன்றாகக் கூட்டிச்சேர்த்தல்

3 தீர்மானம் மேற்கொள்வோருடனான ஈடுபடுதல்

4 சிறுவர்கள் மற்றும் வாலவயதினர்களுடனான ஈடுபடுதல்

5 ஊடகத்துடனான ஈடுபடுதல்

பகிரப்பெற்ற புரிந்தறிவை மேம்படுத்தும்படிக்கென மதங்களிடையேயான நிகழ்வுகளை ஒழுங்குபடுத்துவதற்கான ஓட்டுமொத்த உபாயத்திட்டங்கள் தொடர்ந்துவரும் பகுதியிலே புறவரைவிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மகுடப்பொருளும் இத்திட்டத்தின் பின்புலத்திலே அறிமுகப்படுத்தப்பட்டு விளக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மகுடப்பொருளுக்கும் பின்பதாக நாம் கற்றுக்கொண்ட பாடங்களில் இருந்து தண்டுவிட்டெழுந்த கற்றுக்கொண்ட பாடங்களையும் நல்ல நடைமுறைகளையும் புறவரைவிட்டுள்ளோம். இறுதியாக, செயற்திட்டத்தில் இருந்து நல்ல நடைமுறைக்கான ஒரு உதாதரணத்தை வழங்கியுள்ளோம்.

# 1. உரையாடலுக்கான வெளியை உருவாக்குதல்

உரையாடலைக் குறிக்கும் ஆங்கிலப் பதமான டயலொக் (dialogue) என்பது *டயா* (dia அதாவது ஊடாக) மற்றும் *லொகோஸ்* (logos அதாவது வார்த்தை அல்லது அர்த்தம்) எனும் இரு கிரேக்க அடிப்பதங்களில் இருந்து பெறப்பட்டது. W. ஐசாக்ஸ் (Isaacs) என்பவர் இந்த வரைவிலக்கணத்தை மேலும் விஸ்தரித்து, *"மையத்துடனான சம்பாஷணை, பக்கங்களுடன் அல்ல .... ஒரு உறவிலே மக்கள் ஒன்றுகூடிச் சிந்திக்கும் ஒரு சம்பாஷணை. ஒன்றுகூடிச் சிந்தித்தல் என்பது நீங்கள் உங்களுடைய சொந்த சிந்தனைதான் இறுதியானதென நீங்கள் இனிமேலும் கொள்வதில்லை என்பதைக் குறிப்புணர்த்துவதாய் உள்ளது. நிச்சயம் என அடித்துக்கூறும் உங்களது பிடியை நீங்கள் தளர்த்தி, பிறருடன் உறவிலே இருக்கையிலே அங்கே விளைவீடாகும் சாத்தியங்களுக்குச் செவிமடுக்கிறீர்கள் – அப்படியல்லாவிட்டால் அந்த சாத்தியங்கள் உங்களுக்குத் தோன்றியுமிருக்காது."* [3]

இந்த செயற்திட்டத்தின் அனுபவம் எதுவெனில், மத சமூகங்களிடையே வரையறுக்கப்பெற்ற உரையாடல்களே இடம்பெற்றன என்பதாகும். இதுதான் மத சமூகங்கள் தமது சொந்த சமூகங்களுக்கு எதிராகவோ அல்லது தமது சொந்த சமூங்களின் பிரிவுகளாளலோ இழைக்கப்பட்ட  சகிப்புத்தன்மையற்ற செயல்கள் அல்லது வன்முறைகளுக்கான காரணங்களை ஆராய்வதற்கான வாய்ப்புக்களை மட்டுப்படுத்தியுள்ளது என்பது உணரப்பட்டது.

இந்தச் சமூகங்களுக்கிடையே தொடர்பாடலுக்கும் சிந்தைப் பிரதிபலிப்புக்குமான வெளிகள் உருவாக்கப்படுவதால் இந்த நிலைமை மேம்படலாம். இந்தச் செயன்முறையானது சமூகங்கள் தத்தமது குழு அறிமுகத்தை எப்படியாக வலியுறுத்துகின்றன என்பதை மேம்படப் புரிந்து கொள்ள உதவுகிறது. மதசகிப்பின்மை, மூலகாரணிகள் செயலிழந்து போனமை, மற்றும் சகிப்பின்மையினை ஆக்கபூர்வமான வழிமுறைகளிலே ஈடுபடுத்துதல் ஆகியவற்றையிட்டு தமது தனிப்பட்ட அனுபவங்களைக் கலந்துரையாட இது சமூகங்களுக்கு உதவுகிறது. வேறு மதங்களையிட்டுக் கொண்டுள்ளதான தப்பான எண்ணங்களைப் பாரிய சமூகத்துக்குத் தெரிவிக்கவும், மதங்களுக்கிடையிலான பன்முகத்தன்மையையும் சில நடைமுறைகள் சார்ந்துள்ளதான மதிப்பீடுகளையும காரணங்களையும் புரிந்துகொள்ளவும் தெளிவுபடுத்தவும் இந்த ஆக்கபூர்வமான ஈடுபாடுகள் உதவிசெய்யும். மேலும் இந்த சமூகங்கள் வேறு மத சமூகங்களின் புரிந்துகொள்ளக் கடினமானதாக கண்டுகொண்ட நடைமுறைகளிலே அவர்கள் சிந்தைப்பிரதிபலிக்கவும் உதவிடும்.



இந்த செயற்திட்டமானது பங்கேற்பு மற்றும் மனித உரிமைகள் சார்ந்த அணுகுமுறைகளைப் பயன்படுத்தி பின்புலத்தைப் பற்றிய புரிந்தறிவைக் கட்டியெழுப்புவதை நோக்கக்குவியமாகக் கொண்ட உரையாடல்களுக்கான வெளியை அதன் பல்வேறு கூறுகளூடாக உருவாக்குகிறது.

## கற்றுக்கொண்ட பாடங்கள்

மதங்களுக்கிடையிலான நல்லிசைவினை ஊக்குவித்தலிலே வெளிப்படும் பாடங்கள் வினைத்திறனுள்ள பங்கேற்புக்கு **பாதுகாப்பானதும் தகவூட்டுவதுமான வெளியை உருவாக்குவதன் அவசியத்தை** உறுதிப்படுத்துவதாய் இருந்தது.

[3] W. ஐசக்ஸ் எழுதிய எழுதிய 'உரையாடலும் ஒன்றித்துச் சிந்தித்தல் கலையும்' (Isaacs, W. (1999). Dialogue and the Art of Thinking Together. Doubleday: New York) எனும் நூல், பக்கம் 19

மேலும் பாதுகாப்பானதும் தகவூட்டுவதுமான வெளிகள் "மற்றவரைப்" புரிந்துகொள்ளவும் மற்றும் இதர பல்வேறு சமூகக்குழுங்களிடையே புரிந்தறிவை ஏற்படுத்தவும் உகந்ததாகும்.

இந்த செயற்திட்டத்திலே, உரையாடலுக்கான பாதுகாப்பான வெளிகளை உருவாக்குவது இந்தச் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதிலே ஈடுபட்டிருந்த கைக்கொள்ளுநர்கள் கருக்குழுவுடன் (core group) ஆரம்பித்தது. அவர்கள் அம்பாறை, கொழும்பு மற்றும் காலி ஆகிய மாவட்டங்களிலே சிவில் சமூக ஸ்திபனங்களையும், மதக்குருக்களையும், அரச முகவர்களையும், மற்றும் தனிநபர்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் பல்வேறு மதங்களையும், சமூகங்களையும் சேர்ந்த ஆண்களையும் பெண்களையும் உள்ளடக்கியது.

கீழே விபரிக்கப்பட்டுள்ள பாடங்கள் இந்த விளைவீட்டினை எய்துவத்றகுப் பயன்படுத்திய உபாயத்திட்டங்களைப் புலப்படுத்துகிறது.

இலக்கு சமூகங்களின் **சமூக கலாச்சார பொருளாதார மற்றும் அரசியற் பின்புலங்களையிட்ட** திடமான அறிவானது கைக்கொள்ளுநர்களில் உறுதிப்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கும், மற்றும் அமுல்படுத்தவேண்டிய பொருத்தமான செயற்பாடுகளை உறுதிசெய்யவும் உதவுவதாய் உள்ளது.

மனித உரிமைகளிலே சார்ந்ததான ஒரு **பங்கேற்பு அணுகுமுறை**யினைப் பயன்படுத்துவது பல்வேறு கைக்கொள்ளுநர்களுடனும் இலக்கு சமூகங்களுடனும் ஒரேபோன்ற முறையினைக் கைக்கொள்வதற்கு வினைத்திறனுள்ள ஒரு அணுகுமுறையாகும், ஏனெனில், பின்வருவனவற்றுக்கு அது அவர்களைத் தகவூட்டுவதாய் இருக்கும்:

- அவர்களது எதிர்பார்ப்புக்களை முழுமையாக விளங்கி வினைத்திறனுடன் ஓன்றுபட்டுச் செயலாற்றுதல்
- மனித உரிமைகள் அம்சங்களிலே பிரதிபலித்து விகற்பப் பகுப்பாய்வுசெய்யவும் உபாயத்திட்டங்களை விருந்திசெயதலும், தீர்வுகளை எட்டுதலும்
- மதம், மொழியினம், பாலினம், மற்றும் சமூக பொருளாதார நிலைமைகள் ஆகியவற்றிலே சார்ந்ததான பிரிவினைகளில் இருந்து அப்பாற்பட்டு, செயற்பாட்டுக்காகப் பல்வேறுபட்டதான குழுக்களை ஒன்றுதிரட்டுதல்
- பங்கேற்பாளர்களை மனித உரிமைகளையும் மத நல்லிசைவினையும் பற்றிக் கற்றுக்கொள்ள ஊக்குவிப்பதற்கு, சந்தோஷம் தருவதும் அச்சுறுத்தாததுமான செயற்பாடுகளை ஒழுங்கமைப்பது முக்கியம் என்பதை அம்பாறை, கொழும்பு மற்றும் காலியிலிருந்த செயற்திட்ட அணிகள் துரிதமாகப் புரிந்துகொண்டனர். இதனாலேதான் திருவிழாக்கள், மக்களை ஈடுபடுத்தும் பணிக்களங்கள், கலாச்சார நிகழ்வுகள் ஆகியவற்றுடன் கூடியதான பல வெளிச்சுற்றுலா நிகழ்ச்சிகள் ஒழுங்குபடுத்தப்பட்டன. தனிப்பட்ட அறிவு மற்றும் அனுபவம் ஆகியவற்றைப் பகிர்வதை ஊக்குவிப்பதற்கும், தனிப்பட்ட நம்பிக்கைகள் மற்றும் மதிப்பீடுகள் ஆகியவற்றின்மீதான விகற்ப சிந்தைப்பிரதிபலிப்பை ஊக்குவிப்பதற்குமான பங்கேற்பு அணுகுமுறையானது இந்தச் செயன்முறையிலே பிரதானமானதாய் இருந்தது.

முரண்பாட்டுப் பிரச்சினைகளைக் கையாளுவதற்கும் பொறுப்பு வகிப்போர் மற்றும் உரிமை கொள்ளுவோர் ஆகியோரைக் கலந்துரயாடலுக்குள் கொண்டு வருவதற்கும் **மனித உரிமைகள் சார்ந்த அணுகுமுறை**யை ஒரு கட்டமைப்பாகப் பயன்படுத்துவதானது பிரச்சினையை மனித உரிமைகளுடனும் அதனுடன் தொடர்புபட்டதான உள்ளூர் சட்டங்களுக்கும் தொடர்புபடுத்துவதால் அதனைத் தனிப்பட்ட பிரச்சினையாக ஆக்கிப் பிரச்சினையை மேலும் மோசமாக்கும் நிலைமை தவிர்க்கப்படுகிறது.

உரையாடல்களுக்கான இடைவெளியை உருவாக்குவதிலே நேரம் முக்கியமானதோர் காரணியாகும். செயன்முறையை துரிதப்படுத்துவது எதிர்மறையான விளைவுகளுக்கு இட்டுச்செல்லக்கூடும்.

## நல்ல நடைமுறைகள்

செயற்திட்டம் முழுவதிலும் கற்கைக்கான பாதுகாப்பான இடைவெளியை உறுதிசெய்யும்படியாக சிந்தைப்பிரதிபலிப்பும் மற்றும் உரையாடலும் உருவாக்கப்பட்டுள்ளன. கைக்கொள்ளுநர்கள் பின்வருவனவற்றைக் கொண்டிருப்பது முக்கியமானதாகும்:

இலக்குச் சமூகத்தினரின் சமூக கலாச்சார, பொருளாதார மற்றும் அரசியற் பின்புலத்தைப்பற்றிய முழுமையான புரிந்தறிவைக் கொண்டிருத்தல்

திடமான விளைவீடுகளை எய்துவதற்கும் உபாயத்திட்டங்களை செயற்பாடுகளாக விருத்தியாக்கும்படிக்குமாக, கொக்கொள்ளுநர்கள் தமது அனுபவங்களிலும் மனித உரிமைகள் விடயம்பற்றித் தீர்க்கமாகப் பகுப்பாய்வுசெய்து சிந்தைப்பிரதிபலிப்புச் செய்வதற்கும் அனுமதிக்கும் பங்கேற்பு அணுகுமுறையைப் பயன்படுத்துதல்.

முரண்பாட்டுப் பிரச்சினைகளைக் கையாளுவதற்கான கட்டமைப்பாக மனித உரிமைகள் சார்ந்த அணுகுமுறையைப் பயன்படுத்துதல், ஏனெனில், அது சம்பந்தப்பட்ட பிரச்சினையை தனிநபர்த்துவப்படுத்தாது என்பதால்.

## சம்பாஷணைக்கான இடைவெளிகளை உருவாக்குதல்

### நல்ல நடவடிக்கைக்கான உதாரணம்

ஞாயிறு பாடசாலைகளுடனான அவர்களது செயற்பாடுகளிலே, கொழும்புக்குழுவானது செயற்பாடுகளை நடாத்துவதற்குப் பங்கேற்பு அணுகுமுறையைப் பயன்படுத்தியது. அது பின்வருவனவற்றை உள்ளடக்கியதாக இருந்தது:

- பங்கேற்பாளர்களுடன் கற்கைக்கான சாதகமான பின்புலமாக அனுபவத்தை எப்படியாக ஆக்குவது என்பதையிட்டதான குழு வழிகாட்டல்களை விருத்தியாக்குதலும் அதேவேளை சம்பாஷணைக்கான பாதுகாப்பானதும் இயல்பூட்டுவதுமான இடைவெளியை உருவாக்குதலும். இந்த வழிகாட்டல்கள் உள்ளடக்குபவை:
    - பிறர் என்ன கூறுகின்றனர் என்பதைச் செவிமடுப்பது
    - நிகழ்ச்சிக்கு 100% வருகை தருவதால் ஏனைய பங்கேற்பாளர்களைக் கௌரவப்படுத்துதல்
    - செயற்பாட்டின்போது அலைபேசிகளை அணைத்துவிடுதல்
    - பங்கேற்பாளர்களிடம் அவர்களின் புகைப்படங்கள் எடுப்பதற்கும், அவற்றைப் பதிப்புக்களிலும் வலைத்தளங்களிலும் பயன்படுத்துவதற்கும் பங்கேற்பாளர்களின் எழுத்துமூலபான அனுமதியைக் கேட்டுக்கொள்ளுதல்



- பங்கேற்பாளர்களுக்கு ஒன்றாகப் பணியாற்றுவதற்கும், ஒருவர் ஒருவரின் பெலங்கள் பலவீனங்கள் போன்றவற்றைக் கண்டுபிடிப்பதற்கும், அதன்மூலமாக சமூகச் செயற்பாட்டுச் செயற்திட்டத்தை வழங்குவதிலே நன்றாக வேலையாற்றக்கூடிய ஒரு அணியைக் கட்டியெழுப்புவதற்கும் வாய்ப்புக்களை வழங்குதல்.
- வளதாரர் / பயிற்றுவிப்பாளர் வகிபங்குகளை வகித்து, குழுவை செயன்முறைக்கூடாக வழிநடாத்தி, சிந்தைப்பிரதிபலிப்புக்கும் அனுபவப் பகிர்வுக்குமான நேரத்தையும் இடைவெளியையும் வழங்குதல்.

# 2. பல்வேறு மத சமூகங்களை ஒன்றாகக் கூட்டிச்சேர்த்தல்

*"இந்த நிகழ்ச்சித்திட்டத்தினூடாக நாம் எம்மை வேறு மதக்களைச்சார்ந்த மக்களுக்கு அறிமுகம் செய்துவைப்பதற்கான ஒரு சந்தர்ப்பம் எமக்குக் கிடைத்துள்ளது. ஒருகாலத்திலே நாம் தடுக்கப்பட்டோம். இப்போதோ நாம் ஒன்றாகப் பணியாற்றலாம். முன்னர் நாம் தனிமையிலே இருந்தோம், இப்போதோ நாம் வலையமைப்பிலே இலக்கிறோம் ... இது எமது எதிர்காலத்துக்கான மிகவும் ஆரோக்கியமானதோர் படிமுறையாகும்!"* கொழும்புப் பணிக்களப் பங்கேற்பாளரான ஒரு பாடசாலை அதிபர்.

தன்பாட்டிலேயே தெரியவருவதாக இது தென்பட்டாலுங்கூட, பல்வேறு மதப்பின்புலங்களைச் சார்ந்த மக்களை ஒன்றாகக் கூட்டிச்சேர்ப்பது என்பது எப்போதுமே இலகுவானதாக இராது. இலங்கையின் பின்புலத்திலே, ஒவ்வொரு மதக்குழுவும் மற்றைய குழுவுக்கு அர்த்முள்ள வழிமுறைகளிலே அம்பலப்படுத்தப்படுவது கிடையாது. வேறோர் மதத்தில் இருந்து ஒருவரைப்பற்றி மக்கள் பேசும்போது "மற்றவரை"பற்றியதான கருதுகோளானது அநேகமாகச் செவிமடுக்கப்படுவதுண்டு. பல்வேறு மத அனுஷ்டானங்களுக்கு அம்பலப்படுத்தப்படாத, ஒருவர் மற்றவரின் பாரம்பரியங்கள் மற்றும் முனைமைகள் ஆகியவற்றைப்பற்றிய புரிந்தறிவில்லாத மக்களாலே அங்கே முறுகல்நிலை இலகுவாக உருவாக்கப்படுவதுண்டு.

## கற்றுக்கொண்ட பாடங்கள்

இந்த செயற்திட்டத்தின்கீழ் அமுல்படுத்தப்படும் பல்வேறு சமூக செயற்பாடுகள், தொடர்பாடலுக்கான ஒரு இடைவெளியை உருவாக்குவதற்கும், பல்வேறு மத சமூகங்கள் பற்றிய புரிந்தறிவினை விருத்தியாக்கிக்கொள்வதற்குமான முயற்சிகளாக உள்ளன. இந்த முயற்சிகளில் இருந்து நாம் கற்றுக்கொள்வது எதுவெனில்:

- இவைகள் பாராட்டப்பெறுவதை உறுதிசெய்யும்படியாகப் பல்வேறுபட்டதான மத அனுஷ்டானங்கள் பற்றிய விழிப்பறிவு உள்ளடங்கலாக, மற்றவருக்கு நல்கப்படும் கௌரவம் மிக முக்கியமானதாகும்.
- ஒரே மதக்குழுவிற்குள் உள்ள பிரிவுகளைக் கவனத்திற் கொள்ளவதும் மதங்களுக்கிடையிலான சகவாழ்வைக் கட்டியெழுப்புவதை நோக்காகக் கொண்டதான தொடர்ந்துவரும் முயற்சிகளுக்கு அனுசரனையாக அமையும்.



- மத சமூகங்களுக்குள்ளும் அவற்றுக்கிடையிலும் புரிந்துணர்வினை உற்சாகமூட்டுவது சமூகங்கள் தமக்கிடையே நம்பிக்கையீனத்தை உருவாக்க அல்லது மூட்டிவிட எடுக்கப்படும் முயற்சிகளையிட்டு ஆக்கபூர்வமான வழிமுறைகளிலே பதிலீடு கொடுப்பதற்கு உதவிசெய்யும்.
- மதங்களுக்கிடையிலான உறவுகள் உள்ளடங்கலாக உறவுகளைக் கட்டியெழுப்புவதானது நிறைய நேரம் எடுக்கும் ஒரு செயன்முறையாகும்.

## நல்ல நடைமுறைகள்

பல்வேறு மத சமூகங்களைச் சேர்ந்த மக்களை வெற்றிகரமாக ஒன்றுசேர்ப்பதற்கு பின்வருவன முக்கியமானவைகளாகும்:

- பல்வேறு மதக்குழுக்கள் ஒன்றுடனொன்று சந்திக்க, கலந்துரையாட, உறவுகளைக் கட்டியெழுப்ப பல்வேறு வாய்ப்புக்களை வழங்குதல்
- பல்வேறு மதக்குழுக்களை ஒன்றாகக் கொண்டுவரமுன்பதாக அதற்கு அவை ஆயத்தமாவதற்கு வேண்டிய நேரத்தை வழங்குதல். "ஆயத்தம்" என்பதன் அர்த்தம், ஒவ்வொரு மதக்குழுவும் தனித்தனியாக அணுகப்பட்டு, அதன் அங்கத்தவர்கள் வேறு மதக்குழுக்களுடன் செயலாற்றுவதற்கு நேரிய மனப்பான்மையைக் கொண்டிருத்தல் என்பதாகும்.
- தனிப்படச் சந்திக்க, கலந்துரையாட மற்றும் அவர்களுடன் இடைப்பட நேரம் எடுக்கவும். அத்துடன் இதற்குச் சார்பாக உள்ள, ஆதரவுநல்கும் மதத் தலைவர்களை நாடவும்.
- பல்வேறு மதங்கள் பற்றியும் அவற்றின் மத அனுஷ்டானங்களுக்காக அத்திபாரங்களையும் பற்றிய புரிந்தறிவை ஆக்கபூர்வமான முறைகளிலே பல்வேறு சமூகக் குழுக்களிடையே கட்டியெழுப்பிடவும்.

## பல்வேறு மத சமூகங்களில் உள்ள மக்களை ஒன்றாகக் கூட்டிச்சேர்த்தல்

## நல்ல நடைமுறைக்கான ஒரு உதாரணம்

மக்கள் ஒருவரை ஒருவர் சந்திக்க, கலந்துரையாட, மற்றும் உறவுகளைக் கட்டியெழுப்ப வாய்ப்புக்கள் வழங்குவதிலே நல்ல நடத்தைக்கு காலிக்குழுவின் செயற்பாடுகள் நல்ல உதாரணங்களாகும்.

காலிக்குழு பல்வேறு மதக்குழுக்களைச் சேர்ந்த மக்களை ஒன்றாகக் கூட்டிச்சேர்ப்பதற்குப் பல்வேறு செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தியது. அவற்றுள் ஒரு செயற்பாடு நான்கு சமய வணக்க ஸ்தலங்களுக்கு அம்பலப்படுத்திடும் விஜயங்கள் மேற்கொண்டமையாகும் (பௌத்த, முஸ்லீம், கிறிஸ்தவ மற்றும் இந்து). அதிலே பங்கேற்ற குடிமக்கள் பல்வேறு மதப்பின்புலங்களைச் சேர்ந்தவர்கள். இந்த செயற்பாட்டிலே பங்கேற்றிருந்த ஒரு பங்கேற்பாளர் கருத்துத் தெரிவிக்கையிலே:

*"...எனது வாழ்விலே முதன்முறையாக நான் ஒரு ஆயலத்துக்குள் நுழைந்தேன், வேதாகமத்தைப்பற்றிக் கற்றுக்கொண்டேன், பல்வேறு மதக்கொண்டாட்டங்கள் பற்றி அறிந்துகொண்டேன். எனது வாழ்விலே முதன்முறையாக, அனைத்து நான்கு மதங்களையும் சேர்ந்த மக்களுடன் நான் ஒன்றாக அமர்ந்தேன்."*




தமது செயற்திட்டத்திலே விரும்பப்பட்ட விளைவினை எய்துவதற்கு போதிய நேரம் வழங்கப்படவேண்டியதன் முக்கியத்துவத்தைக் குழு புரிந்துகொண்டது. அவர்கள் இலக்குக் கொண்டிருக்கும் நபர்கள் இந்த அம்பலப்படுத்தும் விஜயத்திலே கலந்துகொள்வதை உறுதிப்படுத்தும்படியாக, அவர்கள் ஒவ்வொரு நபரையும் அவர்களின் ஆவல் மட்டத்தை மதிப்பிடும்படியாகத் தனித்தனியாகச் சந்தித்து பின்பு நிகழ்ச்சித்தினம் அண்மிக்கையிலே அவர்களைப் பின்தொடர்வு செய்தனர். இந்தச் செயன்முறையானது நேரம் எடுப்பதாய் இருந்தாலுங்கூட, அது நன்மை பயத்தது. ஏனெனில் இந்த அம்பலப்படுத்தும் விஜயத்துக்கு நான்கு மதக்குழுக்களிலும் இருந்து 53 பேர் பங்கேற்றிருந்தனர்.

# 3. தீர்மானம் மேற்கொள்வோருடனான ஈடுபடுதல்

இந்தச் செயற்திட்டத்ததின் நோக்கத்துக்காக, தீர்மானம் மேற்கொள்வோர் என்பவர்கள் பல்வேறு மட்டங்களிலே அதிகாரத்தைக் கொண்டிருப்போராகவும், உள்ளூர் அல்லது தேசிய மட்டங்களிலே மத நல்லிணக்கத்தைப் பாதிக்கும் தீர்மானம் மேற்கொள்ளவதில் ஈடுட்டுள்ளோராகவும் வரையறுக்கப்படுகின்றனர். இப்படியான தீர்மானம் மேற்கொள்வோர் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளாகவோ, ஸ்தாபனங்களின் தலைவர்களாகவோ (உ+ம்: பாடசாலைகள், அசாஸ் (அரச சார்பற்ற ஸ்தாபனம்)கள்), அரச முகவர் ஸ்தாபனங்களின் தலைவர்களாகவோ, மதத்தலைவர்களாகவோ இருக்கலாம்.

தீர்மானம் மேற்கொள்வோரை ஈடுபடுத்துவது என்பது ஒரு சவால் என்பதை ஒத்துக்கொள்ளவேண்டும். இது ஏனெனில், சில தீர்மானம் மேற்கொள்வோருடன் முதற்தடவையிலே இடைப்படும்போது அல்லது நீண்ட காலமாக அவர்களுடனான ஒரு உறவைத் தொடர முயற்சிக்கும்போது ஏற்பட்ட நிஜத்தடைகள் மற்றும் தடைகளாகக் கருதப்பட்டவைகள் போன்றவைகளால் ஆகும். சில சமூகங்களிலே, உதாரணமாக, மக்கள் குறித்த சில தீர்மானம் மேற்கொள்வோரை விரும்புவது கிடையாது அல்லது அந்தத் தீர்மானம் மேற்கொள்வோர்தாமே இப்படியான செயற்திட்டங்களிலே ஈடுபடுவதையிட்டு எதிர்மறையான கண்ணோக்குக் கொண்டிருந்தமை. தடைகள் இருந்தாலுங்கூட, இந்தச் செயற்திட்டத்திலே ஈடுபட்டிருந்த கைக்கொள்ளுநர்களின் கருமூலக்குழு (core group) பல்வேறு மட்டங்களைச் சேர்ந்த தீர்மானம் பேற்கொள்வோருடன் உறவுகளைக் கட்டியெழுப்பிடக்கூடியதாக இருந்தது. உதாரணமாக, அம்பாறையில் உள்ள குழுவானது அந்த பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள தீர்மானம் மேற்கொள்வோருடனும் மற்றும் மதத் தலைவர்களுடனும் ஈடுபட்டனர்; அத்துடன் கொழும்பில் உள்ள குழுவானது ஞாயிறு பாடசாலை அதிபர்களுடன் பணியாற்றியது.

### கற்றுக்கொண்ட பாடங்கள்

கீழே தரப்படும் கற்றுக்கொண்ட பாடங்கள், தீர்மானம் மேற்கொள்வோருடன் இடைப்படுகையிலே கருத்திற் கொள்ளவேண்டிய பல சிந்தனைகளையும் உள்ளடக்கியதாகும்.

- இப்படியான ஒரு செயற்திட்டத்தின் வெற்றிக்கு தீர்மானம் மேற்கொள்வோரின் வரவேற்பைப் பெறுவது மிக முக்கியமானதாகும் என்பது பொதுவாக அறியப்பட்ட ஒன்று. தீர்மானம் மேற்கொள்வோருடன் வெற்றிகரமாக ஈடுபடுவதை நிலைநிறுத்துவற்கு நாம் கற்றுக்கொண்டவைகள்:
  - தீர்மானம் மேற்கொள்வோர் யார் என இனங்கண்டுகொள்வது உள்ளிட்டதான **பின்புலப் பகுப்பாய்வினை** மாவட்டங்களில் உள்ள குழுக்கள் மேற்கொண்டமையானது சரியான நபர்களைத் தொடர்புகொள்வதை இலகுவாக்கியது.
  - தீர்மானம் மேற்கொள்வோருடன் ஆரம்பத் தொடர்பு ஏற்படுத்தியபின்பு, ஒரு பதிலீட்டை அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்வதற்காக **போதிய நேரம் வழங்கப்படுவது** முக்கியமானதாகும்.
  - தீர்மானம் மேற்கொள்வோருடன் தொடர்பிணைப்பில் உள்ள **ஏற்கெனவே உள்ள வலையமைப்புக்கள்** அல்லது நபர்களைப் பயன்படுத்துவது ஆரம்பச் சந்திப்புக்கு வழிவகுக்கும்.
- அறியத்தக்க விளைவுகளை எய்துவதற்கு, சமூகம், அரசாங்கம் மற்றும் மதங்களின் தீர்மானம் மேற்கொள்வோர் ஆகியோரின் ஈடுபாடு இந்தச் செயற்திட்டத்தின் ஆரம்பம் முதலே ஆரம்பிக்கப்படவேண்டியதாகும். பின்வரும் குறிப்புகள் இந்தச் செயற்திட்டத்திலே தீர்மானம் மேற்கொள்வோரின் ஈடுபாட்டுக்கு நேரடியான பங்ளிப்பினை வழங்கியது. முக்கிய குறிப்பு: இந்தச் செயற்திட்டத்தைப்பற்றி துடிப்பார்வம் கொள்ளும் ஒரு தீர்மானம் மேற்கொள்வோர் இருப்பது சமூகத்திலே மிகப்பெரும் ஊக்குவிப்பு வளமாக அமையும்.
  - செயற்திட்ட இலக்கு மற்றும் தீர்மானம் மேன்கொள்வோரின் வேலை ஆகியவற்றுக்கிடைய **தொடர்புகளை ஏற்படுத்துவது** இந்தச் செயற்திட்டத்திலே அவர்களது ஈடுபாட்டுக்கு அனுசரனையாக அமையும்
  - தீர்மானம் மேற்கொள்வோரின் **அனுபவம் மற்றும் அந்தஸ்து ஆகியவற்றை ஆரம்பத்திலேயே அங்கீகரித்திடுவது** உங்களது நோக்கத்தை அவர்களுக்கு மீளுறுதிப்படுத்திட உதவியாக இருக்கும்.
  - தீர்மானம் மேன்கொள்வோருக்கு இந்தச் செயற்திட்டத்திலே **அவர்களது ஈடுபாட்டுக்கான சாத்தியங்களைப்பற்றித்** தெரிவிப்பது, அவர்களது பங்கேற்பின் விஸ்தாரத்தைத் தீர்மானிப்பதற்கு அவர்களுக்கு உதவியாக இருக்கும்.

- செயற்திட்டத்தின் பல்வேறு கட்டங்களிலே தீர்மானம் மேறகொள்வோரைக் **கிரமமாகப் பின்தொடர்வு செய்வது** அவர்களை ஈடுபடச்செய்வதற்கும் இந்தச் செயற்திட்டத்திலே அவர்களை ஆவல்கொள்ளச்செய்யவும் உதவிடும்.

- தீர்மானம் மேற்கொள்வோரின் ஆவல் மற்றும் அவர்களை அடையும் சாத்தியம் ஆகியவற்றையிட்டுக் **குழுவில் உள்ள மன எண்ணங்களைக் கவனத்திற்கொள்வது** அந்தத் தீர்மானம் மேற்கொள்வோடனான ஈடுபாட்டுக்குத் தடங்கலாக அவை அமையாதிருப்பதை உறுதிப்படுத்திட உதவியாக இருக்கும்.

## நல்ல நடைமுறைகள்

செயற்திட்டத்திலே தீர்மானம் மேற்கொள்வோரின் ஈடுபாட்டை வளப்படுத்திட பின்வருவன முக்கியமானவைகளாகும்:

- உங்களைப்பற்றியும் இந்தச் செயற்திட்டம்பற்றியும் முழுத்தகவல்களை தீர்மானம் மேற்கொள்வோருடனான ஆரம்பத் தொடர்பை நீங்கள ஏற்படுத்திடுப்போதே வழங்கவேண்டும்.
- சாத்தியமாயின், தீர்மானம் மேற்கொள்வோரை அடைய எத்தனிக்கும்போது ஒரு தேசிய ஸ்தாபனத்தின் உதவியை ஈடுபடுத்தவும். உதாரணமாக, அம்பாறைக் குழு அரச அலுவலர்களை இந்தக் குழுவிலே சந்திக்க விரும்பியபோதெல்லாம் மொழியின ஆய்வுக்கான சர்வதேச மையவகம் (International Centre for Ethnic Studies-ICES) அவர்களைக் கூட்டத்துக்குச் சமூகந்தரும்படி அழைக்கும் கடிதங்களை அனுப்பச்செய்தது.
- தீர்மானம் மேற்கொள்வோருடன் ஒருவருடனொருவர் உறவுகளை விருத்தியாக்கி, நீங்கள் சமூகத்திலே மேற்கொள்ளும் வேலை பற்றிய தகவல்களைக் கிரமமான முறையிலே அவர்களுடன் பகிர்ந்துகொள்ளவும்.



- செயற்திட்டத்துக்கு அவர்களால் கொண்டுவரக்கூடியவை எவை என்பதை இனங்கண்டு, அவர்களது ஈடுபாட்டுக்கான பல்வேறு தெரிவுகளை அவர்களுக்கு வழங்கவும்.
- ஆரம்பம் முதல் செயற்திட்டத்தின் இறுதிச் செயற்பாடுகள் வரைக்கும் அவர்களது பங்கேற்பினை ஊக்குவிக்கவும்.
- அவர்களது ஈடுபாட்டின்மீது பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துவதையும் (உ+ம்: காலக்கெடு, சாத்தியப்பாடு, அவர்களது அரசியல் ஆணையுடனான நேர்ப்பாடு போன்றவை) அதனால் வெவ்வேறான அணுகுமுறைகள் தேவைப்படும் என்பதையும் இனங்கண்டுகொள்ளவும்

## தீர்மானம் மேற்கொள்வோரை ஈடுபடுத்துவது

## நல்ல நடைமுறைக்கான ஒரு உதாரணம்

மத முறுகல்கள் மற்றும் பிரச்சினைகளைக் கவனத்திற் கொள்வதானது ஒரு பல்பணயப்பங்காளத்துவ விடயம் என்பதால், திட்டத்தின் ஆரம்பத்திலும் அடங்கலனைத்திலும் அம்பாறைக்குழு பலதரப்பட்ட தீர்மானம் மேற்கொள்வோருடன் (வெவ்வேறு பின்புலங்களைக் கொண்டவர்கள்) ஈடுபடவேண்டியதன் அவசியத்தை இனங்கண்டுகொண்டது.

மத மற்றும் சமூகம் சார்ந்த ஸ்தாபனத் (சசாஸ்) தலைவர்கள் செயற்திட்டம் முழுவதிலும் தொடர்சியாக ஈடுபடுத்தப்பட்டனர். தனிநபர் மற்றும் குழுக்கூட்டங்களையும் மற்றும் முறைசாராக் கலந்துரையாடல்களையும் உறவுகளைக் கட்டியெழுப்பவும்,

இந்தத் தலைவர்கள் எப்படி ஈடுபடலாம் என்பதற்காக அவர்களது தகைமைக்கொள்ளவினை மதிப்பீடு செய்யவும் இந்தக் குழு பயன்படுத்தியது.

அரசாங்கங்களை ஈடுபடுத்துவதிலே மாவட்டங்களில் உள்ள நிர்வாக உயர்பீடம் கவனத்திற் கொள்ளப்பட்டது. பிரதேச மட்ட அலுவலர்களுடன் [4] (4) குழு ஆரம்பித்து பிரதேச செயலகத்தில் உள்ள அடுத்தமட்ட அதிகாரிகளுடன் பகிரும்படி அவர்கள் கேட்கப்பட்டனர். அவர்கள் செயற்திட்டம்பற்றி நன்கு அறிந்திருப்பதை இது உறுதிப்படுத்தியது.

பிரதேச மட்டத்தில் இருந்து (சமூகச் செயலாற்றத் திட்டங்களை அமுல்படுத்துவது) தேசிய மட்டத்துக்கு (கைக்கொள்ளுநர்கள் மன்றம்) செயற்திட்டச் செயற்பாடுகள் முன்னேறும்போது, அரச பிரதிநிதிகளுடனான ஈடுபாடும் அதேபோல முன்னேறியது. கைக்கொள்ளுநர்கள் மன்றத்திலே அந்தக் குழு மாவட்ட செயலக அலுவலர்களுக்கு அழைப்பு விடுத்து, அவர்களது மாவட்டத்திலே இடம்பெறவுள்ள அடுத்த படிமுறைகளைப்பற்றி அவர்கள் தெளிவாகத் தகவலறிவதை உறுதிப்படுத்தும்படியாக, அவர்களையும் ஈடுபடுத்தியது. இதன்மூலம் மாவட்ட அலுவலர்கள் இந்தச் செயற்திட்டத்தின் பயனையும், அதன் முக்கியத்துவத்தையும் அதிலே அவர்களது வகிபங்கையும் புரிந்துகொள்வதற்கு வழிவகுத்தது. மேலும் எழும் சிறுபூசல்கள் பிரச்சினைகளாக முறுகமுன்பதாக அவற்றைக் கவனத்திற் கொள்ளும் கண்காணிக்கவும் பலதரப்பட்ட பணயப்பங்காளிகளை உருவாக்குவதிலே ஈடுபடும் இறுதியான செயற்பாட்டிலே அவர்களது பங்களிப்புக்கும் அது வழிவகுத்தது.

[4] அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கலாச்சார அலுவலர்கள், காணி அலுவலர்கள்

# 4. சிறுவர்கள் மற்றும் வாலவயதினர்களுடனான ஈடுபடுதல்

1990 இலே அமுலுக்குவந்த சிறுவர்கள் உரிமைபற்றிய ஐ.நா சாசனமானது சிறுவர்களுடனுப் இளம் வயதினர்களுடனும் இடைப்படுப் வினைத்திறனுள்ள வழிமுறைகள் பற்றியும் அவர்களையிட்ட கண்ணோட்டத்திலும் மாற்றங்களையும் அதற்குள் கொண்டமைந்திருந்தது. இதற்குள் உள்ளடங்கியுள்ள அம்சங்களுக்குள் அவர்களுக்கு மேம்படச் செவிகொடுப்பதும் [5]பிள்ளைகள் மற்றும் வாலவயதினர்களைப் பாதிக்கும் விடயங்களிலே அவர்களைச் செயலாற்றம்மிக்க பங்காளிகளாக உள்ளடக்குவதும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

சிறுவர்களையும் வாலவயதினர்களையும் அர்த்தமுள்ள விதத்திலே பங்கேற்கும்படியாக ஊக்குவிப்பது அவர்களது வளர்ச்சிக்கும் விருத்தியாக்கத்துக்கும் மிக முக்கியமானதாகும். அவர்களது பங்கேற்பின்மூலமாகத் தமது தனிநபர் விருத்தியாக்கங்களிலும் தமது சமூகங்களின் அபிவிருத்திகளிலும் தமது வகிபங்குகளை அவர்கள் வகிக்கின்றனர். இந்தச் செயன்முறையினூடாக அவர்கள் தமது மனோதிடனிலே மேம்பட்டு, வாழ்க்கைத்திறன்களைக் கற்று, குடிசார் ஈடுபாடுகளிலே தன்னார்வத்தொண்டைப் பாராட்டும் ஒரு மனநிலையையும் விருந்தியாக்கிக்கொள்கின்றனர்.

## கற்றுக்கொண்ட பாடங்கள்

இந்தச் செயற்திட்டத்தை அமுல்படுத்தும்போது, எமது சமூகச் செயலாற்றச் செயற்திட்டங்களிலே சிறுவர்கள் மற்றும் வாலவயதினர்களை வெற்றிகரமாக ஈடுபடுத்துவதற்குப் பின்வருவன வழிவகுத்தன என்பதை நாம் கற்றுக்கொண்டோம்.

- சிறுவர்கள் மற்றும் வாலவயதினர்களின் சிந்தனைகளுக்குச் செவிமடுக்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொள்ளுதல். கொழும்பிலும் காலியிலும் உள்ள குழுக்கள் விளையாட்டுக்கள் வடிவத்திலே மேற்கொண்ட செயற்பாடுகள் சிறுவர்கள் சுயாதீனமாகத் தம்மைப் புலப்படுத்தவும் செவிமடுக்கப்படவும் பயன்பட்டன.
- செயற்பாட்டின்போது கற்றுக்கொண்ட திறமைகளை அப்பியாசப்படுத்துவதற்கு உரிய வெளியினை சிறுவர்கள் மற்றும் வாலவயதினர்களுக்கு வழங்குதல்
- தமது வெவ்வேறு காலச்சார மற்றும் பாரம்பரியங்களைக் கொண்டாடுவதற்கும் பகிர்வதற்கும் சகல குழுக்களுக்கும் சம வாய்ப்புக்களை வழங்குதல்.
- "கலாச்சார" நடுநிலைமையான அமைவிடங்களிலே செயற்பாடுகளை நடாத்துதல்
- வயதுக்குப் பொருந்தமான செயற்பாடுகளை வடிவமைத்தல்
- ஒரே குழுவுடன் குறித்த சிலகாலத்துக்குப் பணியாற்றுதல்



- அவர்களையும் உள்வாங்கி அவர்களுடன் பணியாற்றும்படிக்கான பொருத்தமான கட்டமைப்புக்களை இனங்காணுதல். கொழும்பிலே ஞாயிறு பாடசாலையில் உள்ள சிறுவர்களை இந்தச் செயற்திட்டத்துக்கான இலக்குப்பங்காளிகளாக குழு இனங்கண்டுகொண்டது. பாடசாலை அதிபர்களிடம் அனுமதி பெறுவது பிள்ளைகளை அடைவதற்கு அனுசரனையாக அமைந்தது.
- வீடியோக்கள் மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளைப் பயன்படுத்துவது அவர்களை ஈடுபடுத்துவதற்கான நல்ல கருவிகளாகத் தென்பட்டன.

[5] வெறுமனே கேட்பது (hearing அதாவது சத்தத்தைச் சரீரகரீதியாகச் செவிக்கு எடுப்பது) என்பதற்கு முரணாக செவிமடுப்பது (listening) என்பது புரிந்தறிவுடன் அவர்கள் கூறுவதைக் கேட்பது எனப் பொருள்படும்

- சிறுவர்களுக்கு மதிப்பீடுகள், உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள், சகல மதங்களுக்குமான மரியாதையை ஊக்குவித்தல், சகிப்புத்தன்மை மற்றும் பாரபட்சம் காட்டாமை ஆகியவற்றைக் கற்பித்தலுடன் அவற்றை உள்ளூர் பாடவிதானத்துக்குள் உள்ளடக்குதல்.
- குறித்த ஒரு விடயத்தையிட்ட இடைப்படுதல்களை விருத்தியாக்கும்போது சிறுவர்கள் மற்றும் வாலவயதினர்களை ஒரே குழுவாகக் கருதாமல் அவர்களை வெவ்வேறாக நடாத்துதல்.
- தமது குடிசார் உரிமைகளை அடைவதற்கான தகவல்கள், கல்வியூட்டம் போன்றதான சரியான கருவிகளைச் சிறுவர்கள் மற்றும் வாலவயதினர்களுக்கு வழங்கி அதன்மூலம் அவர்கள் வினைத்திறனுடன் பங்கேற்க வழிவகுத்தல்.
- செயற்படுவதற்கு உகந்த பொருத்தமான கட்டமைப்புக்களை இனங்காணுதல் – உதாரணமாக, வாலிபர் சங்கங்கள், வாலிபர்கள் ஏற்கனவே ஈடுபட்டிருக்கும் இளையோர் பாராளுமன்றம் போன்றவை.

## நல்ல நடைமுறைகள்

சிறுவர்கள் மற்றும் வாலவயதினர்களை வினைத்திறனுடன் ஈடுபடுத்துவதற்குப் பின்வருவன முக்கியம்:

- மதிப்பீடுகள், உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் ஆகிய பாடங்களை ஆசிரியர்கள், கல்விமான்கள், முறைசார்ந்த மற்றும் ஞாயிறுபாடசாலை போன்ற முறைசாராப் பாடசாலைப் பிள்ளைகள் ஆகியோருக்கு அறிமுகப்படுத்துதல். இது மத சகிப்பு தொடர்பான கலந்துரையாடல்களைத் தாங்குவதுடன், அது தொடர்பான மதிப்பீடுகளுடன் ஈடுபடுவதற்கு பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் உரிய இடைவெளியையும் வாய்ப்பினையும் உருவாக்குவதாகவும் இருக்கும். மேலும் பிரச்சினைகளைக் கவனத்திற் கொள்வதற்கான புறவுருக்கட்டமைப்பினாலும் பொருத்தமான மொழியினாலும் இது ஆசிரியர்களையும் பிள்ளைகளையும் தகவூட்டிடும்.



- மனித மாண்பு, சமத்துவம் மற்றும் சகிப்பு தொடர்பான கலந்துரையாடல்களிலே வாலவயதினர்களையும் ஈடுபடுத்தவேண்டும்.
- வாலவயதினர்கள் ஆக்கபூர்வமான விதத்திலே சமூக வாழ்விலே ஈடுபடவும் சமூகச் செயற்பாடுகளை விருத்தியாக்கவும் தீர்மானங்களை மேற்கொள்ளவும் அவர்களுக்கு உரிய இடைவெளியை உருவாக்கிக்கொள்ளவேண்டும்.

தலைமைத்துவ அனுபவம், மதிப்பீடுகளின் பதங்களிலே அனுபவங்களைத் துலக்காக்காட்டும் ஆற்றல், தவறான தகவல்கள் மற்றும் ஐயம் போன்றவைகளையிட்டுக் கவனத்திற் கொள்ளத்தக்கதாகப் பல்வேறு மதங்களையிட்டதான மேம்பட்ட புரிந்தறிவு, மற்றும் பிற சமூகங்களைச் சேர்ந்த வாலவயதினர்களுடன் ஒன்றாகப் பணியாற்றுதல் ஆகியவைகள், தகவலறிந்தவண்ணமாயும் ஆக்கபூர்வமான வழிமுறைகளிலும் மத சகிப்பின்மையைக் கவனத்திற் கொள்ளும் வாலிபத்தலைமையைக் கட்டியெழுப்பிட மிகவும் முக்கியமானவைகளாகும்.

## சிறுவர்கள் மற்றும் வாலவயதினர்களை ஈடுபடுத்துதல்

## நல்ல நடைமுறைக்கான உதாரணம்

### பிரச்சினை

ஒருவர் மற்றவரின் மதம் மற்றும் மத அனுஷ்டானம் ஆகியவை பற்றிய புரிந்தறிவிலே இருக்கும் குறைவானது சமூகத்திலே முரண்பாடுகள் ஏற்படுவதற்குப் பங்களிக்கும் காரணியாக உள்ளதென்பதைக் கொழும்புக்குழு இனங்கண்டுகொண்டது.

### முன்னெடுப்பு

இந்தப் பிரச்சினையைக் கையாள்வதற்கான உபாயகரமான நுழைவிடமாக ஞாயிறு பாடசாலைப் பிள்ளைகளை இலக்காகக் கொள்வதற்கு இந்தக் குழு தீர்மானித்தது. மனித உரிமைகள் கல்வியூட்டம் மற்றும் *நேர்மையாக விளையாடுங்கள்!* [6] ஆகியவை பற்றிப் புதிதாகப் பெற்றுக்கொண்ட அறிவால் தகவூட்டப்பட்டவர்களாக, அந்தக் குழுக்கள் 4 ஞாயிறு பாடசாலைகளைச் சேர்ந்த 22 ஆசிரியர்களை மனித உரிமைகள் மதிப்பீடுகளிலும் மற்றும் நேர்மையாக விளையாடுங்கள்! கருவிப்பொதியின் பயன்பாட்டிலும் பயிற்றுவித்தன.

அதனைத்தொடர்ந்து ஆசிரியர்களும் தமது வகுப்புகளிலே இந்தக் கருவிப்பொதியைப் பயன்படுத்தினர். முரண்பாடுகளுக்கு இட்டுச்செல்லும் பல்வேறு மனித சூழ்நிலைகளையும், முரண்பாடு ஏற்படச் சாத்தியமானவைகளை எப்படியாகத் தவிர்ப்பது என்பதையும் பிள்ளைகள் ஆராய்ந்தனர். மேலும் பல்வேறு மத சமூகங்களிடையே புரிந்தறிவையும் உறவுப் பாலங்களையும் கட்டியெழுப்பக்கூடியதான கனப்படுத்திமதித்தல் போன்றதான மதிப்பீடுகளை அவர்கள் கலந்துரையாடவும் செய்தனர்.

### விளைவீடுகள்

இந்தப் பணிக்களங்களிலே பங்கேற்ற அனைவரிடமும் இருந்து பெறப்பட்ட மீளூட்டக்கருத்துக்கள் மிகவும் நேரியனவாக இருந்தன. பிள்ளைகள் இந்தக் கருவிப்பொதியிலிருந்து மனித உரிமைகள் மதிப்பீடு பற்றி, அதாவது, கனம், ஏற்றுக்கொள்ளல், உள்ளடக்குதல், கூட்டுறவு, பன்மையையிட்டதான மரியாதை, நேர்மை, பொறுப்பு போன்றவை பற்றியும் அது சமூகங்களிடையே புரிந்தறிவையும் உறவுப்பாலங்களையும் எப்படியாகக் கட்டியெழுப்பும் என்பதைப் பற்றியும் பிள்ளைகள் கற்றுக்கொண்டனர்.

முக்கியமான மதங்களுக்கிடையிலான பிரச்சினைகளிலே வேடிக்கையான வழிமுறைகளிலே பிள்ளைகளை எப்படியாக ஈடுபடுத்தலாம் என்பதையிட்டதான புதுப்புது சிந்தனைகளை ஆசிரியர்கள் பெற்றுக்கொண்டனர். இவற்றைப் பின்வரும் கூற்றிலே ஒரு ஞாயிறுபாடசாலை ஆசிரியர் தொகுத்துக்கூறினார்:

> *"முன்னர் நாம் எமது சொந்த மத எல்லைகளுக்குள் கற்பித்துவந்தோம். இப்போது நாம் ஒருவரோடுவர் தொடர்பாடல் கொண்டிட ஒரு மேடை எமக்கு உள்ளது மட்டுமன்றி வெவ்வேறு மதங்களுடன் நாம் பிணைப்புகளையும் ஏற்படுத்திக் கொண்டுள்ளோம். இப்போது இந்த நேரிய செய்தியை நாம் எமது மாணவர்களுக்கும் ஊடுகடத்திடலாம்."*

---

[6] *நேர்மையாக விளையாடுங்கள்!* பொக்கட் கருவிப்பொதியானது விளையாட்டின் மூலமாக பிள்ளைகளுக்கு மனித உரிமைகளைக் கற்பிப்பதற்கான திறனாற்றலை ஆசிரியர்களுக்கு வழங்குவதை நோக்காக்கொண்ட ஒரு தொகுதி செயற்பாடுகளின் சேகரிப்புச் சேர்க்கையாகும். இந்த செயற்திட்டத்துக்கென இந்தக் கருவித்தொகுதியானது சிங்களத்திலும் மற்றும் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டது

# 5. ஊடகத்துடனான ஈடுபடுதல்

உலகின் நடப்புவிடயங்களை, குறிப்பாக மக்கள் நேரடியான அடைவினைக் கொண்டிராத அல்லது அவர்களது அறிவு குறைவுபடும் துறைகள் சார்ந்த விடயங்களைப் பொதுமக்களுக்குத் தெரிவிப்பதிலே ஊடகம் முக்கிய பங்கை வகிக்கிறது. இலங்கையின் மக்கள் மத்தியிலே செயற்திட்டத்தின் அடைவினை அகலப்படுத்திடும்படிக்கு ஊடகங்களை (பாரம்பரிய மற்றும் சமூக வலைத்தள ஊடகங்கள்) பயன்படுத்தும்படியாக அனைத்துச் செயற்திட்டப் பங்கேற்பாளர்களும் ஊக்குவிக்கப்பட்டனர்.

கொழும்பு, அம்பாறை மற்றும் காலியில் உள்ள எமது குழுக்கள் பாரம்பரிய ஊடகங்களையும் (கூடுதலாகப் புதினப் பத்திரிகைகள்) மற்றும் சமூக வலைத்தளங்களையும் (முகநூல் பெரிதும் விரும்பப்பட்டது) பயன்படுத்தின.

## கற்றுக்கொண்ட பாடங்கள்

பரந்துபட்ட அளவிலே மக்களை அடைவதற்கும் இந்தச் செயற்திட்டம் பற்றிய விழிப்பறிவினை ஏற்படுத்துவதற்கும் ஊடகங்களைப் பயன்படுத்துவது பற்றிப் பின்வரும் பாடங்களை நாம் கற்றுக்கொண்டோம்.

- பொதுமக்களை ஈடுபடுத்துவதற்கு, குறிப்பாகப் பிரதான நீரோடைப்படுத்தப்பட்ட ஊடகம் இல்லாதவிடத்து அல்லது அந்த ஊடகம் பக்கச்சார்பாக இருக்குமிடத்து அவர்களை ஈடுபடுத்த துரிதமானதும் இலகுவானதுமான வழிமுறையாக சமூக வலைத்தளங்கள் அமையலாம். வதந்திகளையிட்ட விழிப்பறிவை ஏற்படுத்தவும் அவற்றை எதிர்கொள்ளவும் இது உதவக் கூடுமாயினும், மதத் தப்பெண்ணங்களுக்கும் முரண்பாடுகளுக்கும் இட்டுச்செல்லும் வதந்திகளை உருவாக்கவும் அவை இலகுவாகப் பயன்படுத்தப்படலாம்.
- முகநூல் போன்றதான சமூக வலைத்தளங்கள் பரந்தளவிலான பொதுமக்களை அடைவதற்கான கருவியை குழுக்களுக்கு வழங்கினாலுங்கூட, தமது தளத்தின் உட்கிடைக்கையைச் சிதைக்காதபடி வெளியார் தமது வலைத்தளங்களிலே பதிவேற்றும் காரியங்கைக் கட்டுப்படுத்தும்படி விழிப்புடன் இருக்கவேண்டிய அவசியமும் குழுக்களுக்கு ஏற்பட்டது.
- ஆயத்தம்செய்த ஒரு அறிக்கையை வழங்குவது அல்லது ஊடகமாநாடுகளை நடாத்துவது, ஊடகவியலாளர்கள் தப்பான அர்த்தம் கற்பிப்பதைத் தவிர்ப்பதுடன் அவர்களுடன் நல்லுறவைக் கட்டியெழுப்பவும் செய்யும்.
- விஸ்தாரமான தளப்பரவலைப் பெறுவதற்கு சரியான ஊடகவியலாளரைத் தெரிவுசெய்வதும் முக்கியம்.
- அச்சூடகம் மற்றும் சமூக வலைத்தளம் ஆகிய இரண்டு ஊடகங்களையும் பயன்படுத்துவது பரந்துபட்ட கேட்போர் தளத்தை அடைய வழிவகுக்கும். உதாரணமாக அம்பாறைக்குழு தமது செயற்பாடுகளுக்கான ஊடகத் தளப்பரவரைப் பெறும்படியாக, ஒரு முகநூல் பக்கத்தை உருவாக்கியதுடன் உள்ளூர் புதினப் பத்திரியையான தமிழ் மிறரையும் (Tamil Mirror) பயன்படுத்தியது.
- ஆய்வு, தொடர்வும் கூர்மையும் (Chronic and the Acute): இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்துக்குப் பின்பதான மத வன்முறைகள் மத சுதந்திரத்திலே சமூக வலைத்தளங்கள் வகிக்கும் முக்கிய வகிபங்கையும், அரசாங்கத்தால் அது பாதுகாக்கப்படவேண்டுமே ஒழிய அது கண்காணிக்கப்படவோ அல்லது தணிக்கை செய்யப்படவோ கூடாது என்பதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டியது.

*"... ஏனைய ஊடகங்கள்மீது தமக்குச்சாதகமற்ற செய்திகளையிட்டு அதிகாரத்துவக் கட்டுப்பாடு நிலவும் சூழலிலே ஈடிணையற்ற மதிப்புக்கொண்டவை என்ற ரீதியிலே இந்த நிஜம் பாதுகாக்கப்படல்வேண்டும். இறுதியாக, மத சுதந்திரமானது சமூக வலைத்தளங்களின் சுயாதீனத்துடன் நெருங்கிய பிணைப்புக்கொண்டது என்று கூறுவது பொருத்தம்."* [7]

[7] பார்க்க. ஜீ. குணதிலக, 2015. தொடர்வும் கூர்மையும்: இலங்கையிலே யுத்தத்துக்குப் பின்பதான மத வன்முறைகள் (G. Gunatilleke The Chronic and the Acute: Post-war Religious Violence in Sri Lanka) பக்கம் 55

## நல்ல நடைமுறைகள்

ஊடகத்துடன் வினைத்திறனுடன் ஈடுபடுவதற்குப் பின்வருவன முக்கியம்:

- தளத்தில் உள்ள ஆட்டக்காரர்களை அறிந்துகொள்ளவேண்டும். உதாரணமாக, விஸ்தாரமான தளப்பரவலைப் பெறவும் உண்மைகளுக்குத் திரிக்கப்பட்டஅர்த்தம் கொடுக்கப்படுவதைத் தவிர்ப்பதற்கும் எந்தப் பக்கத்து ஊடகவியலாளர்களை அல்லது ஊடக ஸ்தாபனங்களைப் பயன்படுத்துவது என்பது.
- நல்ல அறிக்கைகளுக்கு வழிகோலும் ஊடகவியலாளர் மாநாடுகளைக் கூட்டவும் அல்லது எழுதப்பெற்ற சுருக்கத் தொகுப்புகளை வழங்கவும்.
- சமூகத்தில்  முகநூல் அல்லது ருவிட்டர் போன்ற சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தும் மக்கள் இந்தக் கருவிகளை வினைத்திறனுடன் பயன்படுத்தி தேவையேற்படின் ஆதரவு நல்க ஆயத்தமாய் இருக்கும் தகைமை கொண்டிருப்பதை உறுதிசெய்யவும் அல்லது அதற்கான அவர்களது தகைமையைக் கட்டியெழுப்பவும்.

## ஊடகங்களை ஈடுபடுத்துதல்

## நல்ல நடைமுறைக்கான உதாரணம்

மத நல்லிசைவினை ஊக்குவிக்கும் செயற்திட்டத்திலிருந்து பங்கேற்பாளர்கள் தமது செயற்பாடுகளிலே பங்கேற்ற சமூக அங்கத்தவர்களுடன் தொடர்பாடுவதற்கும், பின்பு பரந்துபட்ட சமூகத்தை அடைவதற்குமான ஒரு கருவியாக முகநூலைப் பயன்படுத்தினர். தத்தமது சமூகங்களிலே அவர்கள் அமுல்படுத்திய செயற்பாடுகளை அவர்களது முகநூல் பக்கங்கள் அலங்கரித்தன. ஒருசிலர் சமூகமட்டத்தில் விஸ்தாரமான கேட்போரை அடைவதற்காகப் பிரதானநீரோடை ஊடகங்களுடனும் ஈடுபட்டனர்.

# மதங்களுக்கிடையிலான நிகழ்வுகளை ஒழுங்கமைப்பதற்கான சிந்தனைகளும் உபாயங்களும்

இந்தச் செயற்திட்டத்தை அமுல்படுத்தியதிலே ஈக்குவிட்டாஸ் (Equitas) மற்றும் ஐ.சீ.ஈ..எஸ் (ICES) பெற்ற அனுபவங்களிலே சிந்தைப் பிரதிபலிப்புச் செய்தமை மதங்களுக்கிடையிலான நிகழ்வுகளை வினைத்திறனுடன் ஒழுங்குபடுத்துவதற்கு மேலதிக சிந்தனைகளையும் உபாயங்களையும் உருவாக்கியது. அவைகள் கீழே புறவுரைவிடப்பட்டுள்ளன.

- எந்த ஒரு மத அனுஷ்டானமோ அல்லது கலாச்சாரமோ ஏனையவற்றுக்கு மேலாக முன்னுரிமைப்படுத்தப்படாது இருப்பதை உறுதுசெய்வதனூடாக பிரசன்னமாகியுள்ள சகல மதங்களையும் கனப்படுத்தவும். இதன்மூலம் பிரசன்னமான அனைவருக்கும் உள்ளடக்கம், சமத்துவம் மற்றும் மாண்பு ஆகியவற்றைக் கொண்ட சூழ்நிலையை நீங்கள் உருவாக்குகிறீர்கள்.
- ஒழுங்குகளை மேற்கொளும்போது பங்கேற்பாளர்களின் மத நடவடிக்கைகளுக்கு இடந்தரவும். அதுவும் உள்ளடக்கும் ஒரு சூழ்நிலைக்குப் பங்களிப்புச்செய்வதுடன் உள்ளடக்குதல் மற்றும் இடந்தருதல் ஆகியவற்றுக்கான உதாரணங்களாயும் அமையும். உதாரணமாக:
  - உணவுக் கட்டுப்பாடுகளைப்பற்றி எண்ணஞ்சிந்தனை. பல பங்கேற்பாளர்கள் தமது தனிப்பட்ட, மத, மருத்துவ அல்லது இன்னபிற காரணங்களுக்காக உணவுக்கட்டுப்பாடுகள் கொண்டிருக்கலாமாகையால் அவை கருத்திற் கொள்ளப்படவேண்டும். இலங்கையில் இந்து மார்க்கத்துப் பங்கேற்பாளர்கள் மரக்கறி உணவினர்களாகவும், முஸ்லிம் பங்கேற்பாளர்கள் ஹலால் உணவினர்களாயும் இருக்கலாமாகையால் அதற்கேற்ப ஒழுங்குகளைச் செய்வது முக்கியமானதாக இருந்தது.
  - பாடத்தொடர்களை நிரற்படுத்தும்போது பங்கேற்பாளர்கள் ஈடுபடக்கூடிய மத நடவடிக்கைகளையிட்டு எண்ணஞ்சிந்தனை கொண்டிருக்கவும். உதாரணமாக, பௌத்த துறவிகள் மதியம் 12:00 இற்கு மதிய ஆகாரம் அருந்தவேண்டி இருக்கும். அத்துடன் முஸ்லிம்கள் அதே நேரத்திலே தொழுகையிலே ஈடுபடவேண்டி இருக்கும்.
  - செயற்பாடுகளுக்குச் சகல மத சமூகங்களுக்கும் பொருத்தமான ஒரு திகதியைத் தெரிவுசெய்யவேண்டியது முக்கியமானதாக இருக்கும். இது மதத் தலைவர்களுடனும் சமூக அங்கத்தவர்களுடனும் கலந்துரையாடுவதனூடக மேற்கொள்ளப்படலாம். (உதாரணமாக, ஞாயிறுதினங்கள் கிறிஸ்தவர்களுக்கும், போயா தினங்கள் பௌத்தர்களுக்கும் வசதியாக இராது)
  - நேரம், நடக்கும் இடம், ஏனைய துணைவளங்கள் ஆகியவைகள் சகல மத சமூகங்களுக்கும் பொருத்தமானதாயும், அனைத்து மக்களையும் உள்ளடக்குவதாயும் இருப்பதை உறுதிசெய்துகொள்ளவும்.
- பங்கேற்பு அனுகுமுறையின் ஒரு முக்கிய அம்சம் எதுவெனில், அது பல்வேறு பின்புலங்கள், கலாச்சாரங்கள், மதிப்பீடுகள் மற்றும் நம்பிக்கைகள் கொண்டுள்ள மக்கள் வினைத்திறனுடன் ஒன்றுபட்டுக்கற்கவும் ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொள்ளவும் இயல்பூட்டும் என்பதாகும். பல்வேறு மார்க்கங்களைச் சேர்ந்த மக்களை ஒன்றாகக் கூட்டிச்சேர்க்கும் இந்தச் செயன்முறை சுமுகமாய் இருப்பதை உறுதிசெய்யும்படிக்கு கலந்துரையாடலுக்கான வழிகாட்டல்களிலே இணக்கம் காண்பது ஒரு வழிமுறையாக அமையும். குழுவுக்குள் முரண்பாடுகளைப் பொறிதட்டக்கூடிய அம்சங்களைக் குழு இனங்கண்டு அவற்றைக் கவனத்திற் கொள்வதற்கான வழிகாட்டல்களை நிலைநாட்டவேண்டும். அந்த வழிகாட்டல்கள் பங்கேற்பாளர்கள் தமது சிந்தனைகளைப் பகிர்வதற்குப் பாதுகாப்பை உணர்வதற்கும், குழு முகங்கொடுக்கவிருக்கும் பிரச்சினைகளை முன்னறிந்துகொள்ளவும் அவற்றுடன் இடைப்படவும் சாதகமான சூழ்நிலையை உருவாக்க உதவும். குழு வழிகாட்டல்களுக்கான ஒரு சில உதாரணங்கள் பின்வருமாறு:
  - கூறப்படுவதைக் கவனமாகக் கேட்கவும், செவிமடுக்கவும்
  - எவரையும் மட்டந்தட்டுவதைத் தவிர்க்கவும் (உங்களையோ அல்லது பிறரையோ)
  - ஒவ்வொருவருக்கும் பேசுவதற்கான ஒரு வாய்ப்பினை வழங்கவும்.

**பங்கேற்பாளர்களின் தனிப்பட்ட தேவைகளை, குறிப்பாக அவர்களது பிரத்தியேகம் சார்ந்தவைகளை மதிக்கவும்.** பங்கேற்பாளர்களிடம் செயற்பாட்டின்போது எடுக்கப்படும் வீடியோக்கள் அல்லது புகைப்படங்களிலே அவர்களை உள்ளடக்கலாமா என அனுமதி கேட்கவும். இது பதிவுத்தாள்மூலமோ அல்லது குழுப் புகைப்படம் எடுக்கமுன்பதாக தனித்தனியாகக் கேட்பதனூடாகவோ மேற்கொள்ளப்படலாம்.

செயலாற்றத்தின்போது பயன்படுத்தப்படும் எழுத்தாவணங்கள் அனைத்தும் **தேசிய மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டிருப்பதை உறுதிசெய்து கொள்ளவும்**. (இலங்கையிலே, தமிழ் மற்றும் சிங்களம்).

**பல்வேறு மதஸ்தலங்களிலே செயற்பாடுகளை நடாத்துவது** செழிப்பூட்டும் அனுபவமாகும். ஆயினும் மக்கள் அனைவரும் நுழைய மற்றும் பங்கேற்க அனுமதிக்கப்படும் இடங்களிலே மாத்திரமே செயற்பாடுகள் இடம்பெறவேண்டும். உதாரணமாக, சில மத ஸ்தலங்கள் பெண்களை அனுமதிக்காது என்பதால் அது பெண்பங்கேற்பாளர்களை விலக்கிப்போடும். அப்படியான இடங்கள் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படக்கூடாது.

,



# சமூச் செயற்பாட்டுத் திட்டங்களின் சுருக்கம்

## அம்பாறைக் குழு

### நோக்கிலக்கு

தீவிரப்போக்குக் குழுக்களால் உருவாக்கப்படும் மத முரண்பாடுகளைக் கருத்திற்கொள்ளும்படி சமூகங்களின் தகைமையை வலுவூட்டுதல்.

### செயற்பாடுகள்

செயற்திட்டத்தின் ஒரு பகுதியாக ஒழுங்குபடுத்தப்பட்ட செயற்பாடுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியது: மதங்களின் சகவாழ்வையும் மனித உரிமைகளையும் நோக்கக்குவியங்களாகக் கொண்டு மதப் பாடசாலைகளைச்சேர்ந்த மாணவர்களையும், வாலிபக் குழுக்களையும், மத மற்றும் சமூகத் தலைவர்களையும், ஆசிரியர்களையும், உள்ளூராட்சி அரச பணிமனைகளைச் சேர்ந்த களப்பணியாளர்களையும் இலக்குவைத்து நடாத்தப்பெற்ற 11 விழிப்பறிவூட்டும் பாடத்தொடர்கள்; தீவிரக் குழுக்களால் கொண்டுவரப்படக்கூடிய எதிர்கால வன்முறைகளைத் தவிர்க்கும்படியாகக் கண்காணிப்பு மற்றும் ஒப்புரவாக்கும் குழுக்களை உருவாக்குவதை குவியநோக்காகக் கொண்ட 6 பாடத்தொடர்கள். இந்தப் பாடத்தொடர்கள் 5 பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த மத மற்றும் சமூகத்தலைவர்கள், ஆசிரியர்கள், மற்றும் உள்ளூராட்சிப் பிரதிநிதிகள் ஆகியோரை ஈடுபடுத்தியது.

## கொழும்புக்குழு

### நோக்கிலக்கு

அனைத்து மதச்சமூகங்களையும் சார்ந்த பிள்ளைகள் ஒருவர் மற்றவரின் மதப் புலப்படுத்தல்களையும் நடைமுறைகளையும் புரிந்தறிந்துகொள்ளுதல்

### செயற்பாடுகள்

செயற்திட்டத்தின் ஒரு பகுதியாக ஒழுங்குபடுத்தப்பட்ட செயற்பாடுகள் ஒரு ஆசிரியர் பயிற்சி பணிக்களத்தையும், பௌத்த, இந்து, முஸ்லிம் மற்றும் கத்தோலிக்க ஆகிய நான்கு வெவ்வேறு மத ஞாயிறுபாடசாலைகளைச் சேர்ந்த பிள்ளைகளுக்கான மதிப்பீடுகளைப் புரிந்துகொள்ளல், மதப் பன்மையை மதித்தல், வன்முறையற்ற தொடர்பாடல் ஆகியவற்றை உள்ளடக்கிய நான்கு பணிக்களங்களையும் உள்ளடக்கியது. மதப் பன்மையைக் கொண்டாடும் மற்றும் புரிந்தறிவை ஊக்குவிக்கும் இரண்டு இணைந்த செயற்பாடுகள்: இது நான்கு வணக்க ஸ்தலங்களுக்கும் பிள்ளைகள் மற்றும் ஆசிரியர்களைக் கொண்டுசெல்லும் ஒரு அம்பலப்படுத்திடும் விஜயத்தையும் மற்றும் நான்கு வெவ்வேறு மத சமூகங்களினதும் கலாச்சார மற்றும் பாரம்பரிய நடவடிக்கைகளைப் புலப்படுத்தும் கலாச்சாரக் கொண்டாட்டங்களுக்கான விஜயங்களையும் உள்ளடக்கியது. நிகழ்வுகளின் நிஜ வேளையின்போது ஏற்பட்ட அனுபவங்களைப் பகிர்வதற்கென ஒரு முகநூல் பக்கம் ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் பரந்த பார்வையாளருக்கு மதப்புரிந்தறிவின் செய்தியை விஸ்தரிப்பதற்காக இந்த நிகழ்வுகளின் சாதனைகளைக் கொண்டாடும் ஒரு புகைப்பட ஆவணச்சஞ்சிகை பதிப்பிக்கப்பட்டது.

## காலிக்குழு

### நோக்கிலக்கு

காலி மாவட்டத்தில் உள்ள பல்வேறு மத சமூகங்களிடையே புரிந்தறிவினை வலுவூட்டுதல்

### செயற்பாடுகள்

இந்த செயற்திட்டத்தின் பகுதியாக ஒழுங்குபடுத்தப்பட்ட செயற்பாடுகள் பல்வேறு மதப்பின்புலங்களைச் சேர்ந்த மக்களின் பங்கேற்புடன் அவர்களது மத ஸ்தலங்குக்கான ஒரு விஜயத்தையும், 100 வாலவயதினர்களுக்கான இரண்டு பணிகளங்களையும், 150 ஆசிரியர்களுக்கான மூன்று பயிற்சிப் பட்டறை நிகழ்ச்சிகளையும், 250 பாடசாலை மாணவர்களுக்கான மூன்று பணிக்களங்களையும் மற்றும் சுகாதாரப் பிரிவைச்சேர்ந்த 40 அரச அலுவலர்களுக்கான ஒரு பணிக்களத்தையும் உள்ளடக்கியதாக இருந்தது. காலி மாவட்டத்தின் கரந்தெனிய பிரதேசப்பிரிவிலிருந்து கலந்துகொண்ட வாலவயதினர்கள், மதத் தலைவர்கள், அரச அலுவலர்கள் மற்றும் இதர பொறுப்பாளர்கள் ஆகியோரின் பங்கேற்புடன் இடம்பெற்ற இறுதியான கலந்துரையாடல் பணிக்களமானது மக்களிடையே நிலவும் பல்வேறு மதங்களையிட்ட புரிந்தறிவினை மேம்படுத்திடவும், மனித உரிமைசார் அணுகுமுறையை ஒரு கருவியாகப் பயன்படுத்தி ஒவ்வொரு மதத்துக்குமான கனத்தை அதிகரிக்கவும் செய்த முக்கியமான ஒரு படிமுறையாகக் கணிக்கப்படுகிறது.

